2013 அக்டோபர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதென்னவென்றால், அந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற சங்கத்தில் நிதி இருக்கும்பட்சத்தில், அதன்மூலமாக சொந்தக் கட்டடம் கட்டுவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. நிதியில்லாதபட்சத்தில், மாவட்டப் பொது நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி நிதியிலிருந்தோ, ஊராட்சி முகமை நிதியிலிருந்தோ, இடம் இருக்கும் என்று சொல்கின்றபோது, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்தோ கட்டிக்கொள்வதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த நிதியை கொடுக்கும்பட்சத்தில், விரைவில் கட்டிக்கொடுக்கப்படும், அல்லது விரைவாகக் கட்டிக்கொடுப்பதற்கான வழிவகை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

குழந்தைகள் காப்பகம்

***34239—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலமாக குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலே குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மூலமாக மூன்று மாவட்டங்களில் உருவாக்கியிருக்கும் காப்பகங்கள்போல எல்லா மாவட்டங்களிலும் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, அங்கன்வாடிகளை காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை இயங்கி வருகின்றன. அப்படி அல்லாமல், இந்தக் காப்பகங்களை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இயங்கவைக்கவேண்டும். தேவையான உணவு, பால், போன்றவை வழங்குவதுடன், கல்வி, விளையாட்டு இவற்றை ஊக்குவிக்கக்கூடிய உபகரணங்களை வழங்கி, அதற்கேற்ப பணியாளர்களையும், ஆசிரியர்களையும் நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள் காப்பகத்தில், 15 குழந்தைகள் உள்ளனர். இங்கு ஒரு பாலசேவிகா மற்றும் நடத்துனர் பணியில் உள்ளனர். கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள குழந்தைகள் காப்பகத்தில் இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்தக் காப்பகத்தில் ஒரு

நடத்துனர் பணியில் உள்ளார். மதுரை மாவட்டத்தில் தற்காலிகமாக குழந்தைகள் இல்லாத காரணத்தால், குழந்தைகள் காப்பகத்தினுடைய செயல்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது வேறு இடத்தில் குழந்தைகள் காப்பகம் துவங்குவதற்கு மாவட்ட தொழிலாளர் அலுவலர், சமூக நலப் பாதுகாப்புத் திட்டம், நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இங்கு பணியிலிருந்த ஒரு பாலசேவிகா மற்றும் இரண்டு நடத்துனர்கள் தற்போது தொழிலாளர் அலுவலகத்திலே பணிபுரிந்து வருகின்றனர். தற்பொழுது ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு, ரூ.15/– வீதம் செலவீனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாளொன்றுக்கு ரூ.20/– ஆக உயர்த்துவதற்கு ஆணையிட்டு, அது வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நேரங்களை மாற்றியமைத்தல் போன்ற பணிகள் மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காப்பகங்கள் அதிகமாக அரசு மற்றும் தனியார் கட்டடங்கள், மெட்ரோ இரயில் திட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற இடங்களில் அமைக்கப் பெறவேண்டும். தனியார் பங்களிப்புடன் இயங்கவும், சொந்தக் கட்டடம் உட்பட எல்லா வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைக்கப் பெறவேண்டும். அது தனியார் பங்களிப்புடனும் இயங்குமேயானால், பல்வேறு வசதிகளை நாம் உருவாக்கித் தர முடியும். அந்தவிதத்தில், அவ்வாறான காப்பகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற பள்ளிகளில் 2 குழந்தைகள், 1 குழந்தைதான் இருக்கிறார்கள். மேற்படி குழந்தைத் தொழிலாளர்கள் எங்கெல்லாம் புதிதாக இருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டால் அதற்குத் தகுந்தவாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு புதிய பள்ளிகளைத் தொடங்குவதற்கும் அதற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டத்தின்படி, 50 பெண் தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிகின்ற தோட்ட நிறுவனங்களில் குழந்தைகள் காப்பகம் வைக்கவேண்டும். ஆனால், நீலகிரி மாவட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள 90 விழுக்காடு தனியார் தோட்ட நிறுவனங்களில் குழந்தைகள் காப்பகங்கள் வைப்பதில்லை. இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுவரை 71 குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த இடங்களில் தேவை ஏற்படின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குழந்தைகள் காப்பகத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.